செ.வெ.எண்.01 நாள் : 01.04.2020

# அரியலூர் மாவட்டம்

## கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதிக்காக ரூ.85 இலட்சத்து 50 ஆயிரத்திற்கான காசோலைகளை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம் அவர்கள் மற்றும் குன்னம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.டி.இராமச்சந்திரன் அவர்கள் வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதிக்கான காசோலைகளை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் மற்றும் குன்னம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஆர்.டி.இராமச்சந்திரன்** அவர்கள் ஆகியோர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்களிடம் வழங்கினார்கள்.

**இந்நிகழ்வில், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள் தெரிவித்ததாவது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையில் தீவரம் காட்டி வருவதினால், நமது மாநிலத்தில் அல்லும் பகலும் பார்க்காமல் தடுப்பு நடவடிக்கை பணிகளில் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து அனைவரும் சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள். மேலும், அரியலூர் மாவட்டத்தில் கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 144 தடை உத்தரவு பின்பற்றப்பட்டு வருகிறது. பொதுமக்கள் அத்தியாவசிய பணிகள் தவிர வெளியில் வராமல் இருக்க வேண்டும்.

அனைத்து ஊராட்சிகளிலும் பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருட்களான காய்கறிகள், மளிகை பொருட்கள் ஆகியவை வாகனம் மூலம் வீடு, வீடாக சென்று விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் தங்கள் இருப்பிடத்திற்கே அத்தியாவசிய பொருட்கள் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் தடை உத்தரவு முடியும் வரை வெளியே வர வேண்டாம். மேலும், தாங்கள் இடைவெளியினை கடைபிடித்தால் நோய் தொற்று ஏற்பட வாய்ப்பில்லை.

அனைத்து கிராம ஊராட்சிகளிலும் பொதுமக்களிடையே சமூக இடைவெளி பேணுதலை உறுதிசெய்திட குறு வட்டார அளவில் கண்காணிப்பு குழுக்கள் அமைத்து 3 ஊராட்சிகளுக்கு ஒரு கண்காணிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளனர். பொதுமக்கள் சமூக இடைவெளியினை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். தனிநபர் சுகாதாரத்தினை கடைப்பிடிக்க வேண்டும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதிக்கும், மாவட்ட அளவில் கொரோன தடுப்பு நடவடிக்கையாக மேற்கொள்ளப்படவுள்ள பல்வேறு சிறப்பு பணிகளுக்காகவும் ஆர்வமுள்ள நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் முன்வந்து நிதிகளை வழங்கலாம் என மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

முன்னதாக, மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் சட்டமன்ற நிதியிலிருந்து ரூ.30 இலட்சத்திற்கான காசோலையினையும், தனது சொந்த நிதியிலிருந்து ரூ.2 இலட்சத்திற்கான காசோலையினையும், **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் (ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர்) சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூ.30 இலட்சத்திற்கான காசோலையினையும், தனது சொந்த நிதியிலிருந்து ரூ.2 இலட்சத்திற்கான காசோலையினையும், **திரு.ஆர்.டி.இராமச்சந்திரன்** அவர்கள் (குன்னம் சட்டமன்ற உறுப்பினர்) சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூ.20 இலட்சத்திற்கான காசோலையினையும், தனது சொந்த நிதியிலிருந்து ரூ.1 இலட்சத்திற்கான காசோலையினையும், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் தனது சொந்த நிதியிலிருந்து ரூ.50 ஆயிரத்திற்கான காசோலையினையும் என ஆகமொத்தம் ரூ.85 இலட்சத்து 50 ஆயிரத்திற்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதிக்காக மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்களிடம் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வீ.ஆர்.சீனிவாசன், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் பொ.சந்திரசேகரன், மாவட்ட வருவாய் அலுவலர் கா.பொற்கொடி, திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், இணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) (பொறுப்பு) மரு.இளவரசன், கோட்டாட்சியர் ஜெ.பாலாஜி, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.வீ.சி.ஹேமசந்த்காந்தி, தலைமை மருத்துவ அலுவலர் மரு.இரவிசங்கர், தாமரைக்குளம் ஊராட்சி மன்றத்தலைவர் பிரேம்குமார் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.